




RNI.TNTAM/2022/81857

# தகவல் எக்ஸ்பிரஸ்

ஊக்கமே தகவல் பரிமாற்றம் இணையதள நாளிதழ்

THAGAVAL EXPRESS Online News Paper

www.thagavalexpress.in

@thagavalexpress @thagavalexpress

thagavalexpress2021@gmail.com









| மலர்: 05 | இதழ் 04 | இணையதள நாளிதழ் | ஆகஸ்ட் 13.2026 (வியாழன்) | சென்னை |
|---|---|---|---|---|
| Vol: 05 | Issue 04 | Online News Paper | August 13.2026 (Thursday) | Chennai |


# தாய் இல்லாத வெற்றிடத்தை இப்போதும் உணர்கிறேன்

## பிரதமர் நரேந்திர மோடி உருக்கம்



**புதுடெல்லி:**

தாய் இல்லாத வெற்றிடத்தை இப்போதும் உணர்கிறேன் என்று ராம்நாத் கோவிந்த் சுயசரிதை வெளியீட்டு விழாவில் பிரதமர் நரேந்திர மோடி உருக்கமாக பேசியுள்ளார்.

குடியரசு முன்னாள் தலைவர் ராம்நாத் கோவிந்த் ‘இந்தியக் குடியரசின் வெற்றி: என் வாழ்க்கை, என் போராட்டங்கள்’ என்ற பெயரில் எழுதியுள்ள சுயசரிதை புத்தக வெளியீட்டு விழா டெல்லி விஞ்ஞான் பவனில் நேற்று நடைபெற்றது. விழாவில் புத்தக்கத்தை வெளியிட்டு பிரதமர் மோடி பேசியதாவது:

குடியரசு முன்னாள் தலைவர் ராம்நாத் கோவிந்தின் சுயசரிதை புத்தகத்தை வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறேன். அவரது சுயசரிதை இந்திய ஜனநாயகத்தின் பாரம்பரிய அடையாளமாக மாறும். வரும் தலைமுறையினர் அதிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் ஏராளமாக உள்ளன. இளைய தலைமுறையினரிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன்.

குறுக்குவழிகள் உங்கள் வாழ்வை சீரழித்து விடும். இளைஞர்களே நீங்கள் குறுக்கு வழியைத் தேர்ந்தெடுக்க விரும்பினால் உங்களுக்கு பிடித்தமானவர்களின் சுயசரிதையை படியுங்கள். சுயசரிதைகளைப் படித்து மற்றவர்களின் போராட்டங்களிலிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். குடியரசுத் தலைவர் பதவியிலிருந்து விலகிய பின்னரும் கோவிந்த் ஓய்வெடுக்கவில்லை. இந்திய ஜனநாயகத்தில் ஒரு புதிய அத்தியாயத்தை உருவாக்கும் நோக்கில், “ஒரே நாடு; ஒரே தேர்தல்” என்ற திட்டத்துக்காக தீவிரமாக பணியாற்றி வருகிறார்.

அவரது சுயசரிதையை இளைஞர்கள் அனைவரும் கட்டாயம் படிக்க வேண்டும். ராம்நாத் கோவிந்த் தனது புத்தகத்தில் அவரது தாயார் குறித்து எழுதியுள்ளார். வீட்டில் ஏற்பட்ட தீ விபத்தால் அவரது தாயார் எப்படி இறந்தார் என்பதை புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். அவரது வலியை நான் உணர்கிறேன். நான் அதிர்ஷ்டம் மிக்கவன். எனது தாயார் 100 ஆண்டுகள் வரை வாழ்ந்து என்னை ஆசீர்வதித்துச் சென்றார்.

ஆனாலும், அவர் இல்லாத வெற்றிடத்தை இப்போதும் நான் ஆழமாக உணர்கிறேன். ஒருவரின் மன உறுதி எப்படிக் கடினமான சூழல்களைக் கடந்து மிக உயர்ந்த அரசியலமைப்புப் பதவிக்கு உயர உதவும் என்பதை ராம்நாத் கோவிந்தின் வாழ்க்கை நமக்கு காட்டுகிறது. இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

# சபாநாயகர் ஓம் பிர்லா வழங்கிய தேநீர் விருந்தில் கனிமொழி எம்.பி. பங்கேற்பு

## அரசியலில் களத்தில் புதிய பரபரப்பு

**புதுடெல்லி:**

நாடாளுமன்றத்தில் சபாநாயகர் ஓம் பிர்லா வழங்கிய தேநீர் விருந்தில் திமுக சார்பில் கனிமொழி எம்.பி. பங்கேற்றார். இது அரசியல் வட்டாரத்தில் புதிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த மாதம் 20ம் தேதி தொடங்கியது. கூட்டத்தொடர் தொடங்கிய முதல் நாளில் இருந்து நீட் தேர்வு முறைகேடு விவகாரம், டெல்லியில் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது போலீசார் நடத்திய நடவடிக்கை, ராமர் கோவில் நன்கொடை பணம் திருட்டு குற்றச்சாட்டு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டன.

இதனால் எதிர்க்கட்சிகளுக்கும் மத்திய அரசுக்கும் இடையே கடும் மோதல் போக்கு நீடித்தது. இருப்பினும் எதிர்க்கட்சி எம்.பி.க்களின் அமளிக்கு இடையே முக்கிய மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டன. மழைக்கால கூட்டத்தொடரின் கடைசி நாளான இன்றும் எதிர்க்கட்சிகள் கடும் அமளியில் ஈடுபட்டன.

இதனால், மக்களவை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. அமளி தொடர்ந்து நீடித்ததால், மக்களவையை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தார் சபாநாயகர் ஓம் பிர்லா. அதனை தொடர்ந்து மாநி லங்களவையும் ஒத்திவைக்கப்பட்டது. இவ்வாறு 20ம் தேதி தொடங்கிய மழைக்கால கூட்டத்தொடர் இன்றுடன் நிறைவடைந்தது.

இந்த நிலையில், மழைக்கால



கூட்டத்தொடர் நிறைவடைந்ததையடுத்து, அனைத்துக் கட்சி எம்.பி.க்களுக்கும் வழக்கம்போல் சபாநாயகர் ஓம் பிர்லா தேநீர் விருந்து அளித்தார். இந்த தேநீர் விருந்தில் பங்கேற்க அனைத்துக் கட்சி எம்.பி.க்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. சபாநாயகரின் தேநீர் விருந்தை காங்கிரஸ், சமாஜவாதி உள்ளிட்ட இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் புறக்கணித்துள்ளனர்.

ஆனால், தேநீர் விருந்தில் திமுக சார்பில் கனிமொழி எம்.பி. பங்கேற்றார். பாஜகவுடன் திமுக நெருக்கம் காட்டி வருவதாகவும், தொகுதி மறுவரையறை உள்ளிட்ட மசோதாக்களை திமுக உதவியுடன் பாஜக நிறைவேற்ற திட்டமிட்டுள்ளதாகவும் தவெக, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் விமர்சித்து வரும் நிலையில், தேநீர் விருந்தில் கனிமொழி எம்.பி. கலந்துகொண்டிருப்பது அரசியல் களத்தில் பரபரப்பையும் விவா தத்தையும் எற்படுத்தி உள்ளது.

**கனிமொழி எம்பி கூறுவது என்ன ?**

இதுதொடர்பாக நாடாளுமன்ற வளாகத்தில் திமுக எம்.பி. கனிமொழி கூறுகையில், “ காங்கிரஸிடம் இருந்து மட்டுமே விலகி இருக்கிறோம்; இந்தியா கூட்டணியில்தான் இருக்கிறோம்” எனக் கூறினார்.

# 1,06,998 பேருக்கு வேலைவாய்ப்புடன் ரூ.67,452 கோடி மதிப்பிலான

# 97 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

## முதல்வர் விஜய் முன்னிலையில் கையெழுத்து




**சென்னை:**

சென்னை கிண்டியில் உள்ள ஐ.டி.சி. கிராண்ட் சோழா நட்சத்திர ஓட்டலில் ரூ. 1 லட்சம் கோடி முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் வெற்றி தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது. தமிழக முதல்வர் ஜோசப் விஜய் தலைமை தாங்கினார். இந்த மாநாட்டில், 97 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

இதன் மூலம் தமிழ்நாட்டிற்கு ரூ.67,452 கோடி தொழில் முதலீடுகள் ஈர்க்கப்பட உள்ளன. 1 லட்சத்து 6 ஆயிரத்து 998 பேருக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாக இருக்கின்றன. ஏற்கனவே, கடந்த 3 மாதங்களில் போடப்பட்ட தொழில் முதலீடுகளையும் சேர்த்து, த.வெ.க. அரசு பதவியேற்ற 100 நாட்களில் 104 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.

தொடர்ந்து, ரூ.4,4 கோடியில் 8 புதிய திட்டங்களுக்கு முதல்வர் விஜய் அடிக்கல் நாட்டினார். மேலும் ரூ.2,676 கோடியில் 5 திட்டங்களைத் தொடங்கி வைத்தும், ரூ.777.74 கோடியில் புதிய கட்டடங்களைத் திறந்து வைத்தும், 9 நிறுவனங்களில் பல்வேறு பணியிடங்களுக்கு தேர்வான 20 பேருக்கு பணிநியமன ஆணைகளை வழங்கியும் சிறப்பித்தார்.

இதன் மூலம் ரூ.1 லட்சத்து 2 ஆயிரத்து 514 கோடி முதலீடுகள் ஈர்க்கப்படும். 1 லட்சத்து 21 ஆயிரத்து 788 பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட உள்ளன.

தமிழ்நாட்டில் ஹிந்துஜா குழுமம் ரூ.2,500 கோடி முதலீடு செய்கிறது. இதன்மூலம் 500 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

அல்ட்ராவயோலெட் நிறுவனம் தமிழ்நாட்டில் ரூ.779 கோடி முதலீடு செய்கிறது. ல்ட்ராவயோலெட் EV ஆலை கிருஷ்ணகிரியில் அமைகிறது. இதனால் 4,000 பேருக்கு வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

டெய்ம்லர் நிறுவனம் தமிழ்நாட்டில் ரூ.4,000 கோடி முதலீடு செய்கிறது. டெய்ம்லர் நிறுவனத்தின் ஆலை காஞ்சிபுரத்தில் அமைக்கப்பட இருக்கிறது.

ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவனம் ரூ.250 கோடி முதலீடு செய்கிறது. லூகாஸ் டிவிஎஸ் நிறுவனம் ரூ.2,500 கோடி முதலீடு செய்கிறது. டைட்டன் நிறுவனம் தமிழ்நாட்டில் ரூ.1,000 கோடி முதலீடு செய்கிறது. செயின்ட் கோபைன் நிறுவனம் ரூ.2,000 கோடி முதலீடு செய்கிறது. ஜே.கே. டயர்ஸ் நிறுவனம் ரூ.5,000 கோடி முதலீடு செய்கிறது. பீனிக்ஸ் கோத்தாரி நிறுவனம் ரூ.1,000 கோடி முதலீடு செய்கிறது.

இந்த வெற்றி தமிழ்நாடு முதலீட்டாளர் மாநாடு 2026ல் ஜெர்மனியை சேர்ந்த டைம்லர் (Daimler) நிறுவனத்துடன் மிக முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. காஞ்சிபுரம் மாவட்டம் ஒரகடம் சிப்காட் தொழிற்பூங்காவில் இயங்கி வரும் தனது 400 ஏக்கர் பரப்பிலான உற்பத்தி மற்றும் ஆராய்ச்சி மையத்தை ரூ.4,000 கோடி முதலீட்டில் மேம்படுத்தவுள்ளது. இதன் மூலம் வணிக வாகனங்களின் வடிவமைப்பு, ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் உற்பத்திப் பணிகள் விரிவுபடுத் தப்படுவதோடு, 400 பேருக்கு புதிய வேலை வாய்ப்புகளும் உருவாக்கப்பட உள்ளன

சென்னையில் நடைபெற்ற வெற்றி தமிழ்நாடு முதலீட்டாளர் மாநாடு 2026ல், ஆஸ்திரேலியாவை சேர்ந்த ஆவிட் குழுமம் முக்கியப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொண்டது. அடுத்த 5 ஆண்டுகளில் நகர்ப்புற உள்கட்டமைப்பு, சுற்றுலா, சுகாதாரம் மற்றும் சுரங்க உபகரண உற்பத்தித் துறைகளில் களமிறங்கும் இந்நிறுவனம், முதற்கட்டமாக ரூ.7,000 கோடி முதலீட்டில் திருவள்ளூர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் திட்டங்களை செயல்படுத்தி 12,000 பேருக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்கவுள்ளது.

அக்னிகுல் காஸ்மோஸ் ரூ.400 கோடி முதலீடு செய்துள்ளது. இதன் மூலம் 1,500 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். ஷைலி இன்ஜினீயரிங் ப்ளாஸ்டிக்ஸ் ரூ.500 கோடி முதலீடு, 'அல்ட்ரா வெயலட்' நிறுவனம் ரூ.779 கோடி முதலீடு செய்துள்ளது. இதன் மூலம் 4,000 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும.

சூப்பர் மைக்ரே நிறுவனம் ரூ.477 கோடி முதலீடு செய் துள்ளது. இதன் மூலம் 150 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். YKK ஜப்பான் நிறுவனம் ரூ.1,651 கோடி முதலீடு 4,316 பேருக்கு வேலை வாய்ப்பு உருவாகவுள்ளது.

# தகவல் எக்ஸ்பிரஸ் பத்திரிகை உபயோக ஆட்டோவை சேதப்படுத்திய மர்ம நபர்கள்

**சென்னை:**

சென்னை சைதாப்பேட்டையில் அலுவலகத்திற்கு எதிரே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தகவல் எக்ஸ்பிரஸ் பத்திரகையின் உபயோக ஆட்டோவை மர்ம நபர்கள் சேதப்படுத்தியுள்ளனர். இதுதொடர்பாக காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை சைதாப்பேட்டை ஜீனிஸ் சாலை முதல் பஜார் ரோடு வரை சாலையின் ஓரங்களில் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த சிறு கடைகள் அகற்றப்பட்டன. இதற்கு எனது பத்திரிகை முழுமையாக துணை நின்றது. செய்திகள் வெளியிட்டது. இந்தநிலையில் ஜீனிஸ் சாலையில் உள்ள தகவல் எக்ஸ்பிரஸ் பத்திரிகை அலுவலகத்திற்கு எதிரே ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பத்திரிகை அலுவலக ஆட்டோவின் மேல் கவர், இருபக்கமும் உள்ள கவர்களில் அடையாளம் தெரியாத





மர்ம நபர்கள் இன்று (13.08.2026) பிளேடால் தொடர்ச்சியாக கிழித்துள்ளனர். இது ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டதால் ஏற்பட்ட கால்புணர்ச்சியா? அல்லது போதை ஆசாமிகள் யாராவது இதுபோன்று செய்தார்களா? அல்லது செய்திகள் வெளியிட்டு நேர்மையாக செயல்பட்டு வருவதால் இதனை பொறுத்துக்கொள்ள முடியாத சிலர் இதுபோன்று செய்துள்ளார்களா? என்கிற பல்வேறு விதமான கேள்விகள் எழுந்துள்ளன.

இதுதொடர்பாக காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. காவல்துறையினர் உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளனர்.

## தலையங்கம்

# தகவல் எக்ஸ்பிரஸ்

*ஆகஸ்ட் 13.2026 (வியாழன்)*

## வடகிழக்கு பருவ மழை முன்னேற்பாடு குறித்து அவையில் எப்போது விவாதம்?

தமிழக சட்டசபை கூட்டம் பரபரப்பாக சென்று கொண்டிருக்கிறது. இதில் காவிரி விவகாரம் குறித்து பேசப்படுகிறது. ஆனால் ஆளும் கட்சியோ, எதிர்க்கட்சியோ பெரிதாக பேசவில்லை என்பதுதான் உண்மை. சட்டசபையில் இதுபற்றி விவாதித்தால் தான் கிட்டத்தட்ட முடிவு எட்டப்படும்.

தற்போது புதிதாக பதவி ஏற்றுள்ள எம்எல்ஏக்கள் கன்னிப்பேச்சு என்பதால் அவரவர்கள் தொகுதி பற்றிய பிரச்சனைகளை முன் வைக்கிறார்கள். 4 நாட்கள் விடுமுறை முடிவடைந்து சுதந்திர தின கொண்டாட்டாத்திற்கு பிறகு மீண்டும் வருகிற திங்கட்கிழமை சட்டசபை கூடுகிறது. கன்னிப்பேச்சுகளை முடித்துவிட்டு நாம் அடுத்தக் கட்டத்திற்கு போக வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

தமிழக சட்டசபையில் இது மழைக்கால கூட்டத் தொடர். மழைக்கால முன்னெச்செரிக்கை நடவடிக்கை குறித்த பேச்சுக்கள் அதிகமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் இது புதிய ஆட்சி என்பதால் எதுவும் இல்லை. இருந்தாலும் தென்மேற்கு பருவ காலம் முடிவடைந்து தற்போது வடகிழக்கு பருவ காலம் தொடங்க உள்ளது. இது மிகவும் குறிப்பிட வேண்டியது. மழை குறைவாகவும் இருக்கலாம். மழை அதிகமாகவும் இருக்கலாம். 2015ம் ஆண்டு செம்பரம்பாக்கம் ஏரி நிரம்பி வழிந்தோடி துவம்சம் செய்தது போல் இனி ஒரு சம்பவம் அரங்கேறவே கூடாது.

அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையை அரசு இப்போதே எடுக்க வேண்டும். நடைபெற்றுக் கொண்டிருக்கும் சட்டசபை கூட்டத்திலேயே வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து என்னென்ன செய்ய வேண்டும் என்பது குறித்து விரிவான விளக்கத்தை மக்களுக்கு முன்வைக்க வேண்டும். நீர்வளத்துறை அமைச்சர் ஆனந்த் இதுபற்றி சட்டசபையில் விளக்க வேண்டும்.

மழைக்காலத்தின் வீரியத்தை இந்த அரசு உணர்ந்தால், மக்களின் நலனை உணர்ந்ததுபோல் ஆகும். ஆகவே நடந்து கொண்டிருக்கின்ற இந்த சட்டசபை கூட்டத்தொடரிலேயே வடகிழக்கு பருவமழை தொடர்பான முன்னெச்சரிக்கை குறித்து அவையில் விவாதம் அவசியம்.

## ஆணவக் கொலைகளை தடுக்க நடவடிக்கை: அமைச்சர் வன்னி அரசு



**சென்னை:**

ஆணவப் படு கொலையில் ஈடுபடுவோர் மீது தயவு தாட்சண்யமின்றி நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்பட்டுள்ளதாக சமூக நீதித்துறை அமைச்சர் வன்னி அரசு தெரிவித்துள்ளார். பாட்ஷா கமிட்டி அறிக்கை கிடைத்த பிறகு, ஆணவக் கொலைகளுக்கு எதிராக தனிச்சட்டம் இயற்றுவது குறித்து முதலமைச்சர் விஜய் முடிவு செய்வார் எனவும் கூறினார். ஆணவக் கொலைகளைத் தடுக்க அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## நாட்டின் 80வது சுதந்திர தின விழாவுக்கான ஏற்பாடு பணிகள் மும்முரம்

# சென்னை கோட்டை முன்பு தீவிர அணிவகுப்பு ஒத்திகை



**சென்னை:**

சுதந்திர தின விழாவுக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து வரும் நிலையில், சென்னை கோட்டை முன்பு போலீசார் தீவிர அணிவகுப்பு ஒத்திகையில் ஈடுபட்டனர்.

நாட்டின் 80வது சுதந்திர தினம் நாளை மறுநாள் (15ந் தேதி) கொண்டாடப்பட இருக்கிறது. அன்றைய தினம், சென்னை தலைமைச் செயலகம் செயல்பட்டு வரும் புனித ஜார்ஜ் கோட்டை கொத்தளத்தில் முதல் அமைச்சர் ஜோசப் விஜய் முதல் முறையாக தேசியக் கொடியை ஏற்ற இருக்கிறார்.

முன்னதாக, காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையையும் அவர் ஏற்றுக்கொள்ள இருக்கிறார். இந்த ஆண்டு சுதந்திர தினத்தின்போது நடைபெறும் போலீஸ் அணிவகுப்பில் சிங்கப்பெண் அதிரடிப்படையும் இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில், சென்னை கோட்டை முன்பு சுதந்திர தின விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இதற்கிடையே போலீசாரின் அணிவகுப்பு ஒத்திகையும் நடைபெற்று வருகிறது. அதன்படி, இன்று காலை 3வது அணிவகுப்பு ஒத்திகை நடைபெற்றது. இதில், பங்கேற்ற போலீசார், சுதந்திர நாளில் அணியும் ஆடையுடன் மிடுக்குடன் நடந்து வந்தனர்.

சுதந்திர தின விழாவில், முதல் அமைச்சர் ஜோசப் விஜய், தமிழ் நாட்டுக்கும், தமிழின வளர்ச்சிக்கும் பங்காற்றியவர்களைப் பெருமைப்படுத்த தகைசால் தமிழர் என்ற பெயரிலான விருதையும், ரூ.10 லட்சத்துக்கான காசோலை மற்றும் பாராட்டு சான்றிதழையும் வழங்க இருக்கிறார்.

மேலும், இந்த விழாவில் அறிவியல் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்குபவர்களுக்கு டாக்டர் அப்துல்கலாம் விருது, துணிவு மற்றும் சாகச செயலுக்கான கல்பனா சாவ்லா விருது, முதல்வரின் நல் ஆளுமை விருது, மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக மிகச்சிறந்த சேவை புரிந்தோருக்கான தமிழ்நாடு அரசு விருதுகள், மகளிர் நலனுக்காக சிறப்பாக தொண்டாற்றிய தொண்டு நிறுவனம் மற்றும் சமூகப் பணியாளருக்கான விருதுகள், சிறந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதல்அமைச்சர் விருதுகள், முதல் அமைச்சரின் மாநில இளைஞர் விருதுகள் உள்ளிட்டவைகளையும் முதல்அமைச்சர் ஜோசப் விஜய் வழங்கி கவுரவிக்கிறார்.

பல்வேறு விருதுகள்

மேலும், இந்த விழாவில் அறிவியல் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்குபவர்களுக்கு டாக்டர் அப்துல் கலாம் விருது, துணிவு மற்றும் சாகச செயலுக்கான கல்பனா சாவ்லா விருது, முதல்வரின் நல் ஆளுமை விருது, மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக மிகச்சிறந்த சேவை புரிந்தோருக்கான தமிழ்நாடு அரசு விருதுகள், மகளிர் நலனுக்காக சிறப்பாக தொண்டாற்றிய தொண்டு நிறுவனம் மற்றும் சமூகப் பணியாளருக்கான விருதுகள், சிறந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கான முதல்அமைச்சர் விருதுகள், முதல் அமைச்சரின் மாநில இளைஞர் விருதுகள் உள்ளிட்டவைகளையும் முதல்அமைச்சர் ஜோசப் விஜய் வழங்கி கவுரவிக்கிறார்.



**தமிழக சட்டப்பேரவைத் தலைவர் ஜே.சி.டி.பிரபாகர், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய கோட்ட அலுவலகம்-5ல் ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட டாக்டர். தாமஸ் சாலை திட்டப்பகுதியைச் சேர்ந்த 65 பயனாளிகளுக்கு குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு ஆணைகளை வழங்கினார். உடன் அமைச்சர் ப.வெங்கடரமணன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைவர் கு.ப.கிருஷ்ணன், வாரிய தலைமைப் பொறியாளர் ச.மணிவண்ணன், நிர்வாக பொறியாளர் பி.விரவாஞ்சிநாதன் மற்றும் வாரிய அலுவலர்கள் உள்ளனர்.**

## ஜவஹர்லால் நேரு விளையாரங்கத்தில் ரூ.8 கோடியில் செயற்கை இழை தடகள ஓடுதளம்

### அமைச்சர் ஆதவ் அர்ஜூனா திறந்து வைத்தார்



**சென்னை:**

தமிழ்நாடு விளையாட்டு மேம் பாட்டு ஆணையத்தின் மூலம் சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளை யாட்டரங்கம், ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகத்தில் ரூ.8 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட செயற்கை இழை தடகள ஓடுதளம் பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜூனா இன்று (13.08.2026) திறந்து வைக்கப்பட்டது. தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்களுக்கு தேசிய, பன்னாட்டு தரத்திற்கு இணையான பயிற்சி வசதிகள் கிடைக்கப்பெறும் வகையில் இந்த தடகள ஓடுதளம், செயற்கை இழை ஓடுதளமாக புதுப்பிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை மாவட்டந்தோறும் விரிவுபடுத்தும் நோக்கில், செயற்கை இழை தடகள ஓடுதளங்கள் இராமநாதபுரம், சேலம், கடலூர் ஆகிய 3 மாவட்டங்களில் ரூ.38 கோடியே 24 இலட்சம் மதிப்பில் புதிய செயற்கை இழை தடகள் ஓடு தளங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னை. கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருவண்ணாமலை, நீலகிரி, ஈரோடு, தஞ்சாவூர் ஆகிய 9 மாவட்டங்களில் செயற்கை இழை தடகள ஓடுதளங்கள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

# மதுரையை தாக்கும் வெப்பத்தீவு பாதிப்பு

## ‘பசுமை மதுரை செயல் திட்டம்‘ தீட்ட நீதிமன்றத்தில் மனு



**மதுரை:**

மதுரையில் அதிக வெப்ப அபாயம் உள்ளதாக ஆக்ஸ்போர்டு ஆய்வு அறிக்கை தெரிவித்துள்ளது.. இந் நிலையில், "பசுமை மதுரை செயல்திட்டம்" அமல்படுத்தக் கோரிய மனுவை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை விசாரித்தது. வைகை கரை ஆக்கிரமிப்பு அகற்றம், ரிங் ரோடு மரக்கன்றுகள் நடுதல் மற்றும் வெப்ப அலை தடுப்புத் திட்டம் தொடர்பாக அரசு பதிலளிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை நீதிபதிகள் அதிரடியாக உத்தரவிட்டுள்ளனர்.

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் வெளியிட்ட ஆய்வறிக்கையில், உலகம் முழுவதும் பெருத்த கவனத்தை ஈர்த்துள்ளது. 10 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வாழும் 205 முக்கிய நகரங்களை ஆய்வு செய்ததில், அதிக வெப்ப அபாயத்தை எதிர்கொள்ளும் நகரங் களின் பட்டியலில் மதுரை உலக அளவில் 7வது இடத்தை பிடித்துள்ளது.

தென் தமிழகத்தின் முக்கிய மையமாக விளங்கும் மதுரை மாநகரில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இந்த வெப்பநிலை உயர்வு, பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையை பெரிதும் பாதித்து வருகிறது. நகரமயமாக்கல், புதிய கட்டிடங்களின் வருகை, வைகை ஆற்றின் கரைகள் மற்றும் நகரை சுற்றியுள்ள முக்கிய சாலைகளின் விரிவாக்கம் போன்ற பல்வேறு வளர்ச்சி பணிகளுக்காக பழமையான பெரிய பெரிய மரங்கள் அதிக அளவில் அகற்றப்பட்டுள்ளன. இதனால் மதுரையின் பசுமை பரப்பு குறைந்து வெப்ப தீவு எனப்படும் பாதிப்பு உருவாகியுள்ளது என்று குறிப்பிட்டிருந்தது.

இந்தநிலையில், மதுரை மானகிரி பகுதியைச் சேர்ந்த வழக்கறிஞர் செல்வகுமார் என்பவர், இதுதொடர்பாக உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் பொதுநல மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். அதில், "மதுரையின் பசுமைப் பரப்பை அதிகரிக்க "பசுமை மதுரை செயல்திட்டம்" என்ற ஒருங்கிணைந்த திட்டத்தை உருவாக்க வேண்டும். மாவட்ட ஆட்சியர் தலைமையில் பல்துறை அதிகாரிகளைக் கொண்ட பிரத்யேக பசுமைக் குழுவை அமைக்க வேண்டும். வைகை ஆற்றின் 2 பக்க கரைகளிலும் உள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றி, அங்கு பூர்வீக மரக்கன்றுகளை நட்டு பசுமைப் பூங்காக்களை உருவாக்க வேண்டும்.

உத்தங்குடி முதல் கப்பலூர் வரையிலான ரிங் ரோடு, கப்பலூர் முதல் வாடிப்பட்டி மற்றும் வாடிப்பட்டி முதல் சிட்டம்பட்டி வரையிலான 4 வழிச்சாலைகள், மாவட்டத்தின் பிற முக்கிய நெடுஞ்சாலைகளின் இருபுறங்களிலும் மரக்கன்றுகளை நட்டு வளர்க்க வேண்டும். வெப்ப அலையைத் தடுப்பதற்கான சிறப்புச் செயல் திட்டத்தை வகுப்பதுடன், இந்த பசுமை மீட்புப் பணிகளை உயர்நீதிமன்றமே நேரடியாகக் கண்காணிக்க வேண்டும்" என்று தன்னுடைய மனுவில் கேட்டுக் கொண்டிருந்தார்.

இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதிகள் சி.வி.கார்த்திகேயன் மற்றும் ஆர்.சக்திவேல் ஆகியோர் அடங்கிய அமர்வு, தமிழக சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, காலநிலை மாற்றத்துறை, நீர்வளத்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை ஆகிய முக்கிய அரசுத் துறைகளின் முதன்மை செயலாளர்கள் இதுகுறித்து விரிவான பதில் மனுத் தாக்கல் செய்ய வேண்டும் என நோட்டீஸ் அனுப்ப நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும், இந்த வழக்கு விசாரணையை வரும் செப்டம்பர் மாதம் 8ம் தேதிக்கு ஒத்திவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

## தொடர் வார விடுமுறை நாட்களை முன்னிட்டு

# தமிழகம் முழுவதும் 2,120 சிறப்பு பஸ்கள் இயக்கம்



**சென்னை:**

வார விடுமுறை நாட்களை முன்னிட்டு, பயணிகளின் வசதிக்காகச் சென்னையில் உள்ள முக்கியப் பேருந்து முனையங்கள் மற்றும் பிற நகரங்களில் இருந்து சிறப் புப் பேருந்துகளை இயக்க தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக்கழகம் திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக அரசு விரைவுப் போக் குவரத்துக்கழக மேலாண் இயக்குனர் குணசேகரன் வெளி யிட்டுள்ள செய் திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் பின்வருமாறு:

கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு நாளை (வெள்ளிக்கிழமை) 505 சிறப்புப் பேருந்துகள், 15ந் தேதி (சனிக்கிழமை) 570 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகப் பட்டினம், வேளாங்கண்ணி, ஓசூர் மற்றும் பெங்களூரு ஆகிய இடங்களுக்கு நாளை (வெள்ளிக்கிழமை) 110 சிறப்புப் பேருந்துகள், 15ந் தேதி (சனிக்கிழமை) 110 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

மாதவரத்திலிருந்து கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, போளூர் மற்றும் புதுச்சேரி ஆகிய இடங்களுக்கு 14 மற்றும் 15ந் தேதிகளில் நாள் ஒன்றுக்கு தலா 80 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படவுள்ளன.

வெளி மாவட்டங்கள் பெங்களூரு, திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய முக்கிய நகரங்களில் இருந்து பல்வேறு ஊர்களுக்கு 200 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படவுள்ளன.

வார விடுமுறை முடிந்து சொந்த ஊர்க ளில் இருந்து பயணிகள் சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக, 16ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) தேவை கேற்ப பல்வேறு இடங்களில் இருந்து 465 சிறப்புப் பேருந்துகள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திமுகவின் இடையீட்டு மனுவையும் சேர்த்து

# காவிரி நீர் தொடர்பான தமிழக அரசின் வழக்கு உச்ச நீதிமன்றத்தில் 17 ஆம் தேதி விசாரணை



**புதுடெல்லி:**

காவிரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நீர் ஒழுங்காற்று குழுவின் உத்தரவுகளின்படி, தமிழ்நாட்டிற்கான உரிய நீரை கர்நாடக அரசு திறக்காத நிலையில் முதலமைச்சர் ஜோசப் விஜயின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் தலைமை நீதிபதி சூர்யகாந்த் அடங்கிய அமர்வின் முன்பு தாக்கல் செய்யப்பட்டது.

இதில் தமிழ்நாடு அரசு சார்பாக ஆஜரான மூத்த வழக்கறிஞர் சி.எஸ் வைத்தியநாதன், இந்த மனுவை அவசர வழக்காக எடுத்துக் கொள்ள கோரிக்கை விடுத்தார். அதனையடுத்து, இந்த மனு மீதான விசாரணை ஆகஸ்ட் 13 எடுத்துக்கொள்ளப்படும் என நீதிபதிகள் அமர்வு தெரிவித்தது. காவிரி நீர் விவகாரம் தொடர்பாக தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த மனுவில், காவிரி படுகையின் நீரியல், வானிலை சூழல் ஆகியவற்றை ஆய்வு செய்து, தமிழ்நாட்டிற்கு ஜூலை 29 முதல் ஆகஸ்ட் 12 ஆம் தேதி வரை விநாடிக்கு 3,500 கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என கர்நாடக அரசுக்கு காவிரி நீர் மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டது. ஆனால் இதனை கர்நாடக அரசு மதிக்கவில்லை.

கபினி, கிருஷ்ணராஜ சாகர் அணைகளிலிருந்து, ஆகஸ்ட் 12 ஆம் தேதிக்குள், வினாடிக்கு 3,500 கன அடி வீதம் மொத்தம் 4.536 டி.எம்.சி, தண்ணீரை திறந்துவிட்டு, அது பிலி குண்டுலு எல்லையை வந்தடைவதை கர்நாடக அரசு உறுதி செய்ய உத்தரவிட வேண்டும். கர்நாடக அணைகளுக்கு வரும் நீரின் அளவை, ஒவ்வொரு 10 நாட்களுக்கு ஒரு முறை காவிரி நீர் மேலாண்மை ஆணையம் நேரடியாக கண்காணிக்க வேண்டும். பிலிகுண்டுலுவில் நீர் வரத்து இருப்பதை உறுதி செய்ய, கர்நாடகாவிற்கு தொடர்ந்து உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டும்.'' எனக் கோரப்பட்டது.

இந்த மனுவை இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கோரி தமிழ்நாடு அரசின் சார்பில் மூத்த வக்கீல்கள் சி.எஸ்.வைத்தியநாதன், ஜி.உமாபதி ஆகி யோர் தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு முன்பு கடந்த 10 ஆம் தேதி முறையிட்டனர். இந்த முறையீட்டை ஏற்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்திருந்தார்.

இதற்கிடையே தி.மு.க விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் சார்பில் தாக்கல் செய்துள்ள இடையீட்டு மனுவை விரைந்து விசாரிக்க கோரி மூத்த வக்கீல் பி.வில்சன் முறையீட்டை பரிசீலித்த தலைமை நீதிபதி, தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ள மனுவுடன் சேர்த்து வருகிற 17 ஆம் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

# நடிகர் தனுஷ் அரசியல் வருகை குறித்து அமைச்சர் சம்பத் அதிரடி பதில்

**கோவை:**

கோவையில் செய்தியாளர்களிடம் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத் பேசியதாவது:

"கோவைக்கு ஆன்மிகம், கல்வி மற்றும் இயற்கையை விரும்பி ஏராளமானோர் சுற்றுலா வருவதால், மாவட்டத்தின் சுற்றுலாத்துறை தொடர்ந்து வளர்ச்சி பெற்று வருகிறது. சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேஷ்குமார் கோவை மாவட்டத்தின் சிறப்புகளை நன்கு அறிந்தவர். கோவையில் சுற்றுலாத்துறை சார்ந்த பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை ஏற்படுத்தித் தருவதாக அவரும் உறுதியளித்துள்ளார்.

போதைப்பொருளை கட்டுப்படுத்த காவல்துறை இரும்புக்கரம் கொண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது; இதற்கு பொது மக்களுக்கும் பெரும் பொறுப்பு உள்ளது. முதல்வரின் நேரடி மேற்பார்வையில் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நான் கோவை வரும் ஒவ்வொரு முறையும் மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகளை அழைத்து சட்டம் ஒழுங்கு நிலவரம்





குறித்து ஆலோசனை நடத்தி வருகிறேன். மாவட்டத்தின் அனைத்து துறைகளின் வளர்ச்சிப் பணிகள் குறித்தும் தொடர்ந்து கேட்டறிந்து வருகிறேன்.

கோவை கல்லூரி மாண வர் கொலை தொடர்பாக சட்டப் பேரவையில் விவாதம் எழுந்துள்ள நிலையில், வரும் திங்கட்கிழமை அவையில் இதற்கு விரிவான பதில் அளிக்க உள்ளோம். இதுகுறித்து முறையான விசாரணை மேற்கொண்டு அதற்கான பதில்கள் நிச்சயம் தெரிவிக்கப்படும்.

கோவை மெட்ரோ ரயில் திட்டம் குறித்துப் பேசினால், கடந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட திட்டமே நிராகரிக்கப்பட்டுள்ளது. இந்த முறை மிகச் சிறந்த முறையில் அறிக்கை தயாரித்து, கண்டிப்பாக அனுமதி பெறும் வகையில் மத்திய அரசிடம் மீண்டும் சமர்ப்பிக்கப்படும்.

கோவையில் சர்வதேச தரத்திலான கிரிக்கெட் மைதானம் அமைக்கும் திட்டம் தொடர்பாக விரிவான அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள ஒண்டிப்புதூர் பகுதியில் இதற்கான சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு முடிவு எடுக்கப்படும்.

நடிகர் தனுஷ் நற்பணி மன்றத்தின் செயல்பாடுகள் குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, இந்த ஜனநாயக நாட்டில் கட்சி தொடங்கவும், மக்களை சந்திக்கவும், ஆட்சி அமைக்க வாய்ப்பு கேட்கவும் அனைவருக்கும் முழு உரிமை உள்ளது. அவரவர் தங்களது சொந்த பாணியில் செயல்பட்டு வருகிறார்கள். ஆனால், தங்களை யார் ஆட்சி செய்ய வேண்டும் என்பதை வாக்களிக்கும் மக்கள்தான் முடிவு செய்வார்கள். தற்போது மக்கள் எங்களை ஏற்றுக் கொண்டுள்ளதால் மாநிலத்தில் சிறப்பான ஆட்சி நடைபெற்று வருகிறது," இவ்வாறு அவர் கூறினார்.


## செய்திச் சிதறல்

லஞ்ச ஒழிப்பு பிரிவு புதிதாக தொடக்கம்

### கோவை மாணவர் கொலையை மூடிமறைப்பதா?: சீமான் ஆவேசம்

**கோவை:**

கோவையில் கல்லூரி மாணவர் அமுதன் சக மாணவர்களாலேயே கொலை செய்யப்பட்டிருப்பது அதிர்ச்சி அளிப்பதாக நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "போதைப்பொருள் புழக்கம் குறித்து தகவல் அளித்த மாணவர் அமுதனின் கொலையை மூடி மறைக்க தமிழக அரசு முயற்சி செய்கிறதா?. கொலையில் தொடர்புடைய அனைவரையும் கைது செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு அரசு ரூ.25 லட்சம் துயர்துடைப்புத் தொகை வழங்க வேண்டும்'' என வலியுறுத்தியுள்ளார்.



### செங்கோட்டை குண்டுவெடிப்புக்கு அல்கொய்தா துணை அமைப்பே காரணம்: ஐ.நா. அறிக்கை





**புதுடெல்லி:**

டெல்லி செங்கோட்டையில் 2025ம் ஆண்டு ஏற்பட்ட கார் குண்டுவெடிப்பு சம்பவத்தில் அல்கொய்தாவின் துணை அமைப்பான 'அன்சார் கஸ்வத் உல்ஹிந்த்' இயக்கத்திற்கு தொடர்பிருப்பதாக ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தெரிவித்துள்ளது. என்.ஐ.ஏ. விசாரித்து வரும் இவ்வழக்கில் 3 மருத்துவர்கள் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அல்கொய்தா சிறிய குழுக்கள் வாயிலாக தாக்குதல்களை நடத்தி வருவதாக ஐ.நா. அறிக்கை குறிப்பிடுகிறது. உறுப்பு நாடுகள் அளித்த மதிப்பீடுகளின் அடிப்படையில் இந்த அறிக்கையை ஐ.நா. தயாரித்துள்ளது.

### கஞ்சா போதையில் விமானம் இயக்கிய விமானி: ஏர் இந்தியா அதிரடி முடிவு

**புதுடெல்லி:**

தாய்லாந்தில் இருந்து டெல்லி வந்த ஏர் இந்தியா விமானத்தை ஓட்டிய விமானி ஒருவர் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள் பயன்படுத்தியிருந்தது கண்டறியப்பட்டுள்ளது.





இச்சம்பவம் பூதாகரமானதை தொடர்ந்து, இன்று முதல் நிறுவனத்தின் அனைத்து விமானிகளுக்கும் கட்டாய போதைப்பொருள் பரிசோதனை நடத்த ஏர் இந்தியா நிர்வாகம் முடிவெடுத்துள்ளது. பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் எடுக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கையால், போதைப்பொருள் பயன்படுத்தும் விமானிகள் மீது நடவடிக்கை பாயும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### சுதந்திர தினத்தையொட்டி பாம்பன் புதிய ரயில் பாலத்தில் பலத்த பாதுகாப்பு

**ராமநாதபுரம்:**

நாடுமுழுவதும் நாளை மறுநாள் (ஆக.15) சுதந்திர தின விழா கொண்டாடப்பட இருப்பதை முன்னிட்டு, ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் அருகே உள்ள பாம்பன் புதிய ரயில் பாலத்தில் ரயில்வே போலீசார் துப்பாக்கி ஏந்தி பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மோப்ப நாய் உதவியுடன் பாலத்தின் தூண்கள் மற்றும் ரயில் தண்டவாள பகுதிகளில் போலீசார் தீவிர ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். மேலும், மீனவர்கள் யாரும் பாலத்தில் அமர்ந்து மீன்பிடிக்க கூடாது என ரயில்வே போலீசார் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளனர்.



### பழனி கோயில் சொத்துகளை பாதுகாக்க புதிய ஆய்வு குழு: அதிகாரிகள் ஆய்வு

**பழனி:**

பழனி கோயில் சொத்துகளை பாதுகாப்பதற்காக, பொன்மணி IAS தலைமையிலான ஆய்வுக்குழுவினர் அக்கோயிலின் தேவஸ்தான அதிகாரிகளிடம் ஆலோசனை நடத்தினர்.

இக்கூட்டத்தில் கோயிலின் வருவாய், கணக்கில் வராத சொத்துகள் மற்றும் சட்டவிரோத பெயர் மாற்றங்கள் குறித்து விவாதிக்கப்பட்டு, கோயிலுக்கு சொந்தமான நிலங்கள் நேரில் ஆய்வு செய்யப்பட்டன. அனைத்து சொத்துகளும் சரிபார்க்கப்பட்டு வருவதாக தெரிவித்த பொன்மணி IAS, ஆக்கிரமிப்பில் உள்ள கோயில் சொத்துகளை மீட்டெடுக்கும் நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்படும் என்றார்.



# கோயில் திருவிழாவில் ஆபாச உடை அணிந்து கரகாட்டம் ஆடினால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு

## சென்னை உயர்நீதிமன்றம் எச்சரிக்கை



**சென்னை:**

அரியலூர் மாவட்டம். உடையார்பாளையம், பாப் பாத்தம்மன் கோயில் திருவிழாவை முன்னிட்டு, கரகாட்டம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சி நடத்த அனுமதி வழங்க காவல்துறைக்கு உத்தரவிடக் கோரி விழாக் குழுவினர் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நீதிபதி வி.லட்சுமி நாராயணன் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதி, "தற்போதெல்லாம் கரகாட்டம் ஆடும் பெண்களின் உடைகள் மிகவும் ஆபாசமாக உள்ளது. தமிழ்நாட்டைவிட ஆந்திராவில் இன்னும் மோசமாக உள்ளது. அப்படியிருக்க கரகாட்டத்தை எப்படி அனுமதிப்பது,'' எனக் கேள்வி எழுப்பினார்.

அதற்கு காவல்துறை தரப்பில், "ஆபாச நடனம் மட்டுமல்லாமல், அரசியல் ரீதியான கோஷங்களையும் எழுப்ப வாய்ப்பு உள்ளதால் தான் அனுமதி வழங்கவில்லை,'' எனத் தெரிவிக்கப்பட்டது.

அதற்கு நீதிபதி, "அரசியல் பேச உடையார்பாளையம் உள்பட நாடு முழுவதும் உரிமை உள்ளது. ஆனால், ஆபாச நடனத்துக்குத்தான் அனுமதி வழங்க முடியாது,'' எனத் தெரிவித்தார்.

அப்போது மனுதாரர் தரப்பில், கரகாட்டம் காலம் காலமாக கிராமங்களில் நடந்து வரும் கலை நிகழ்ச்சி. அதற்கு அனுமதி வழங்க வேண்டும். பக்கத்து கிராமத்தில் ஆடல் பாடல் நிகழ்ச்சிக்கு நிபந்தனைகளுடன் உயர் நீதிமன்றம் கடந்த ஜூன் மாதம் அனுமதி வழங்கியுள்ளதாக சுட்டிக்காட்டி, அந்த உத்தரவு நகலும் தாக்கல் செய்யப்பட்டது.

அதை ஏற்றுக்கொண்ட நீதிபதி, இன்று தொடங்கவுள்ள உடையார்பாளையம் கோயில் திருவிழாவிலும் நிபந்தனையுடன் கரகாட்டத்துக்கு அனுமதி வழங்குவதாக உத்தரவிட்டார்.

மேலும், கரகாட்டம் ஆடும் கலைஞர்கள் ஆபாசமாக உடை அணிந்து நடனம் ஆடினால் உடையார்பாளையம் காவல் நிலையத்தினர் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆபாசமாக ஆடியதற்கான ஆதாரங்கள் இருந்தால் அவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். அதன் அடிப்படையில், தாமாக முன் வந்து நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரணைக்கு எடுத்து, சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதிபதி எச்சரித்தும் உத்தரவிட்டுள்ளார்.

# அதிமுகவில் இருந்து திருநங்கை அப்சரா விலகல்



**சென்னை:**

அதிமுகவில் இருந்து விலகுவதாக கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமிக்கு, திருநங்கை அப்சரா கடிதம் எழுதியுள்ளார். அதில், 'எனது அரசியல் பயணம் இனி வேறு ஒரு பாதையில் செல்லலாம்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சமீபகாலமாக அதிமுகவில் இருந்து எம்எல்ஏ.க்கள் மற்றும் நிர்வாகிகள் தொடர்ந்து வெளியேறி வரும் நிலையில், தற்போது அப்சராவும் கட்சியில் இருந்து விலகுவதாக பழனிசாமிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்த கடிதத்தில், 'மனதில் கனத்த உணர்வுடன் அதிமுகவில் இருந்து எனது விலகலை தெரிவித்துக் கொள்கிறேன். முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மீது கொண்டிருந்த ஆழ்ந்த மரியாதையும், அன்பும், அரசியல் சிந்தனைகள் மீதான நம்பிக்கையும் இந்த இயக்கத்துடன் என்னை இணைத்தது.

எனது அரசியல் பயணத்தில் எனக்கு நீங்கள் வழங்கிய அன்பு, மரியாதை, நம்பிக்கை மாறும் வாய்ப்புகளுக்காக என்னுடைய மனமார்ந்த நன்றி. அதிமுகவில் இருந்து விலகுவது என்பது மனக்கசப்பு அல்லது தனிப்பட்ட வருத்தத்தால் எடுக்கப்பட்டது அல்ல.

எனது வாழ்க்கையின் முக்கிய அங்கமாக அதிமுகவில் இருந்த காலம் இருக்கும். எனது அரசியல் பயணம் இனி வேறு ஒரு பாதையில் செல்லலாம். ஆனால் மக்களுக்காக பணியாற்ற வேண்டுமென்ற எனது நோக்கம் மாறாது' என்று அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

முன்னதாக, அதிமுகவில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவால் கட்சியின் செய்தித் தொடர்பாளராக நியமிக்கப்பட்டவர் திருநங்கை அப்சரா. ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு காங்கிரஸில் சேர்ந்து, மகளிர் காங்கிரஸ் தேசிய பொதுச்செயலாளர் ஆனார். பின்னர், மீண்டும் அதிமுகவில் சேர்ந்தார். அவருக்கு கடந்த ஜூலை மாதம் கொள்கைப்பரப்பு துணைச் செயலாளர் பதவியை பழனிசாமி வழங்கி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சுதந்திர தினத்தன்று டாஸ்மாக் மதுக்கடைகள் விடுமுறை

## மதுபானங்கள் விற்றால் கடும் நடவடிக்கை என எச்சரிக்கை

**சென்னை:**

சென்னை மாவட்டத்தில், 15.08.2026 (சனிக் கிழமை) அன்று சுதந்திர தினத்தில் மதுபானம் விற்பனை செய்யக்கூடாது மீறினால் மதுபானம் விற்பனை விதிகளின்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் மாவட்ட ஆட்சி த்தலைவர் எஸ்.மாலதி ஹெலன், எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வருகிற 15.08.2026 (சனிக்கிழமை) அன்று சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழ்நாடு மதுபான சில்லறை விற்பனை (கடைகள் மற்றும் பார்கள்) விதிகள் 2003, விதி 12 மற்றும் தமிழ்நாடு மதுபானம் (உரிமம் மற்றும் அனுமதி) விதி கள் 1981 விதி 2511(a) ஆகியவைக ளின் கீழ் சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து டாஸ்மாக் (FL1) மதுபான சில்லறை விற்பனை கடைகள் மற்றும் அதனைச் சார்ந்த பார்கள், FL2 உரிமம் கொண்ட கிளப்புகளைச் சார்ந்த பார்கள், FL3 உரிமம் கொண்ட ஹோட்டல்களைச் சார்ந்த பார்கள் மற்றும் FL3(A)/FL3(AA) முதல் FL11 வரை உரிமம் கொண்ட மதுபான விற்பனையங்கள் / மதுபான கூடங்கள் அனைத்தும் கண்டிப்பாக மூடப்பட்டு 15.08.2026 (சனிக்கிழமை) அன்று சுதந்திர தினத்தில் மதுபானம் விற்பனை செய்யக்கூடாது என இதன்மூலம் அறி விக்கப்படுகிறது. தவறினால் மதுபானம் விற்பனை விதிகளின்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ். மாலதி ஹெலன் தெரிவித்துள்ளார்.

# டாடா சன்ஸ் தலைவர் என்.சந்திரசேகரன் ராஜினாமா ஏற்பு



**மும்பை:**

டாடா சன்ஸ் நிறுவனத்தின் தலைவர் என்.சந்திரசேகரனின் ராஜினாமா ஏற்கப்பட்டுள்ளது. மேலும், அடுத்த தலைவரைத் தேர்ந்தெடுக்கும் நோக்கில் தேர்வுக் குழுவை அமைப்பதற்கான தீர்மானமும் நிறைவேற்றப் பட்டுள்ளது.

டாடா சன்ஸ் நிறுவனத்தின் தலைவரான தமிழகத்தைச் சேர்ந்த என்.சந்திரசேகரனின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு பிப்ரவரியில் முடிவடைகிறது. மூன்றாவது முறையாக அப்பதவியை வகிக்க தனக்கு விருப்பமில்லை என்று அவர் கடிதம் மூலம் நிர்வாகக் குழுவுக்கு தெரிவித்திருந்தார். இதுதொடரபாக என்.சந்திரசேகரன் வெளியிட்ட அறிக்கையில், “சர் டோரப்ஜி டாடா அறக் கட்டளை மற்றும் ஸ்ரீ ரத்தன் டாடா அறக் கட்டளை ஆகியன ஏகமனதாக என்னை பிப்ரவரி 20, 2027க்குப் பின்னரும் டாடா சன்ஸ் தலைவராக இருக்கும்படி பரிந்துரைத்தன.

இதை டாடா சன்ஸ் நிறுவனத்தின் நியமனம் மற்றும் ஊதியக் குழுவும் ஏற்றுக் கொண்டது. இந்தப் பரிந்துரை டாடா சன்ஸ் போர்டுக்கு அனுப்பப்பட்டது. ஆனால், அதன் உறுப்பினர்களில் ஒருவர் பரிந்துரையை ஏற்றுக் கொள்ளவில்லை. ஒருமனதாக ஆதரவு இல்லாத நிலையில், நான் ராஜினாமா முடிவை எடுத்தேன்.

டாடா குழுமத்தில் 40 ஆண்டுகளாக பணி யாற்றிவிட்டேன். பெரு மதிப்புக்குரிய இந்த நிறுவனத்துக்கு இத்தனை ஆண்டுகளாக எனது பங்களிப்பைச் செலுத்தியது மனநிறைவைத் தருகிறது. அதுவும் கடந்த 10 ஆண்டுகளாக டாடா சன்ஸ் குழுமத்தினை தலைமையேற்று நடத்தியது என்பது மிகுந்த கவுரவும், மிகப்பெரிய பொறுப்பு.

எனக்கு அடுத்ததாக இந்தப் பதவியை ஏற்கப்போவது யார் என்பதை விரைவில் முடிவு செய்யும்படி நிர்வாக வாரியத்திடம் கேட்டுக் கொண்டுள்ளேன். அதன்மூலம் பொறுப்பு கைமாறுதல் சுமுகமாக நடைபெறும் என்று நம்புகிறேன்” என்று தெரிவித்திருந்தார்.

இதையடுத்து அவரது ராஜினமா ஏற்கப்படுவதாக டாடா ட்ரஸ்ட்ஸ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக டாடா ட்ரஸ்ட்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், மீண்டும் பதவியை ஏற்க வேண்டாம் என்ற என்.சந்திர சேகரனின் முடிவை சர் டோராப்ஜி டாடா ட்ரஸ்ட் மதிக்கிறது. கடந்த பத்தாண்டுகளில் டாடா சன்ஸ் மற்றும் டாடா குழுமத்துக்கு அவர் ஆற்றிய பங்களிப்பு மற்றும் தலைமைப் பொறுப்புக்கு எங்கள் மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

டாடா குழுமத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள், வளர்ச்சி மற்றும் உருமாற்றங்கள் நிகழ்ந்த காலகட்டத்தில் அவர் ஆற்றிய மகத்தான பங்களிப்புக்கு நாங்கள் அவருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

டாடா சன்ஸ் மற்றும் டாடா குழுமத்தின் விழுமியங்கள் மற்றும் நீண்டகால நலன்களுக்கு ஏற்ப சுமுகமான, சரியான, ஒழுங்கான தலைமை மாற்றத்ததை உறுதி செய்வதில் டாடா சன்ஸிற்கு நாங்கள் முழு ஆதரவை வழங்குகிறோம்” என்று குறிப்பிட்டுள்ளது.

# நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் நிறைவு: 11 மசோதாக்கள் நிறைவேற்றம்



**புதுடெல்லி:**

நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நடைபெற்று வந்த மழைக்கால கூட்டத்தொடர் நிறைவடைந்தது.

கடந்த மாதம் ஜூலை 20ம் தேதி துவங்கிய நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் இன்றுடன் அமளி துமளியுடன் நிறைவு பெற்றது. டெல்லி போராட்டத்தில் இளைஞர்கள் மீது போலீசார் தடியடி சம்பவம், ராமர் கோவில் அறக்கட்டளை நன்கொடை முறைகேடு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களை எழுப்பி, இரு அவைகளிலும் எதிர்க்கட்சி எம்பிக்கள் கடும் அமளியில் ஈடுபட்டதால் அவையில் செயல்பாடு கடுமையாக பாதிக்கப்பட்டன.

கூட்டத்தொடர் முழுவதும் எதிர்க்கட்சிகள் விவாதங்களில் பங்கேற்க வேண்டும் என்று சபாநாயகர் ஓம் பிர்லா பலமுறை வேண்டுகோள் விடுத்தபோதிலும், அவர்கள் தங்களது போராட்டத்தைத் தொடர்ந்தனர். இதனால் அவையின் நடவடிக்கைகள் அடிக்கடி ஒத்திவைக்கப்பட்டன.

இந்த கூட்டத்தொடரில் சுப்ரீம் கோர்ட்டு (நீதிபதிகளின் எண்ணிக்கை) திருத்த மசோதா, பிறப்பு மற்றும் இறப்புப் பதிவு திருத்த மசோதா, தேசிய கவுரவ அவமதிப்புத் தடுப்பு திருத்த மசோதா, பொதுத் தேர்வுகள் (முறையற்ற வழிமுறைகளைத் தடுத்தல்) திருத்த மசோதா உள்பட 12 மசோதாக்கள் இரு அவைகளிலும் தாக்கல் செய்யப்பட்டது. இதில், இந்தியப் புள்ளிவிவரக் கழக மசோதாவைத் தவிர, மற்ற 11 மசோதாக்களும் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டன.

இந்தநிலையில், நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடரில் உறுப்பினர்கள் 'வந்தே மாதரம்' பாடலைப் பாடி நிகழ்வுகளை நிறைவு செய்ததோடு, மக்களவை காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது, பிரதமர் மோடியும் அவையில் உடனிருந்தார்.

கூட்டத்தொடர் முடிந்த பிறகு செய்தியாளர்களிடம் நாடாளுமன்ற விவகாரத்துறை மந்திரி கிரண் ரிஜிஜு கூறியதாவது:

இரு அவைகளிலும் ஏற்பட்ட இடையூறுகள் ஒட்டுமொத்த செயல்பாடுகளை கடுமையாக பாதித்தன.

பணிசார்ந்த விஷயங்களைப் பொறுத்தவரை, இது மிகவும் வெற்றிகரமான கூட்டத்தொடராக இருந்தது. நாங்கள் மொத்தம் 12 மசோதாக்களை நிறைவேற்றினோம். இருப்பினும், விவாதம் மற்றும் கலந்துரையாடலைப் பொறுத்தவரை, அது அந்த அளவுக்கு வெற்றிகரமாக அமையவில்லை.

ஒதுக்கப்பட்ட மொத்த நேரத்துடன் ஒப்பிடுகையில், மக்களவையின் செயல்பாடு 19 சதவீதம், மாநிலங்களவையின் செயல்பாடு 39 சதவீத ஆகும். எதிர்க்கட்சிகள் செய்த இடையூறுகள் அவையின் செயல்பாடுகளை சீர்குலைத்ததுடன், அவ்வப்போது வெளிநடப்பும் செய்தன. இருப்பினும், ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் எம்பிக்களும், சில எதிர்க்கட்சி எம்பிக்கள் விவாதங்களில் தொடர்ந்து பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தொடரின் போது மக்களவையில் ஒரே ஒரு மசோதா மீது மட்டுமே முழுமையான விவாதம் நடைபெற்றது. தேர்வுகளில் வினாத்தாள் கசிவைத் தடுப்பதையும், முறைகேடுகளைக் கட்டுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட இந்த மசோதா குறித்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் முழுமையாக விவாதிக்கப்பட்டது.

இவ்வாறு அவர் கூறினார்.

# ஜாதிவாரி கணக்கெடுப்பில் தெலுங்கானா அரசை மத்திய அரசு பின்பற்ற வேண்டும்

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் மாணிக்கம் தாகூர் யோசனை



**சென்னை:**

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் எம்.பி. வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது;

ஜாதிவாரி மக்கள்தொகை கணக் கெடுப்புக்கு தெலுங்கானா காங்கிரஸ் அரசு மாதிரியை, மத்திய அரசு பின்பற்ற வேண்டும்

நாடு முழுவதும் ஜாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணிகளை ஒன்றிய அரசு தொடங்கியுள்ளது. முதல் கட்டமாக, வீடுகளின் பட்டியல் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதைத் தொடர்ந்து, வரும் செப்டம்பர் 1ஆம் தேதி முதல் மக்கள்தொகை கணக்கெடுப்பு தொடங்கவுள்ளது. அதற்கான படிவத்தில், ‘ஜாதி” என்ற கேள்விக்கு, மக்கள் குறிப்பிடும் ஜாதியின் பெயரை அப்படியே பதிவு செய்வது என்று மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

மக்களிடம், ‘உங்கள் ஜாதி என்ன?” என்று கேட்டால், பெரும்பாலும் உட்ஜாதி பெயர்களையே குறிப்பிடுவார்கள். அந்தப் பெயர்கள் அரசின் பட்டியலில் இருக்காது. அவற்றை அப்படியே பதிவு செய்தால், பெரும் குழப்பங்கள் ஏற்படும். இதனால், ஜாதிவாரி கணக்கெடுப்பு நடத்தியதன் நோக்கமே நிறைவேறாமல் போய்விடும்.

எனவே, மக்கள்தொகை கணக்கெடுப்புப் படிவத்திலேயே ஜாதிகளின் பட்டியலை வழங்கி, அதில் அவரவர் ஜாதியைத் தேர்ந்தெடுக்கச் சொல்ல வேண்டும். கடந்த 2021ஆம் ஆண்டு, தெலுங்கானா மாநில காங்கிரஸ் அரசு மிகச் சிறப்பாக ஜாதிவாரி கணக்கெடுப்பை நடத்தி முடித்தது. அது நாடு முழுவதும் பெரும் பாராட்டைப் பெற்றது. தெலுங்கானா காங்கிரஸ் அரசின் மாதிரியை மத்திய அரசு பின்பற்ற வேண்டும். அப்போதுதான் துல்லியமான, உண்மையான தரவுகள் கிடைக்கும்.

துல்லியமான, உண்மையான தகவல்கள் கிடைத்தால்தான், உண்மையிலேயே சமூக மற்றும் பொருளாதார ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களைக் கண்டறிந்து, அவர்களுக்கான இடஒதுக்கீட்டை வழங்க முடியும். அவர்களுக்கான தனித் திட்டங்களைச் செயல்படுத்த முடியும். அதன் வாயிலாக, சமூக நீதியை நிலைநாட்ட முடியும்.

எனவே, ஜாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை பெயரளவுக்கு நடத்தாமல், அறிவியல் ரீதியாகவும், நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தியும் மிகச் சிறப்பாக நடத்த வேண்டும். இதற்கு தெலுங்கானா காங்கிரஸ் அரசின் மாதிரியைப் பின்பற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தி, பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன்.”

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தவெக பெண் நிர்வாகியிடம் ரகசிய வீடியோ இருந்த செல்போன் பறிப்பு

## அக்கட்சியின் மற்றொரு நிர்வாகி கைது



**தூத்துக்குடி;**

தூத்துக்குடி மாவட்டம், ஆறுமுகநேரி அருகே த.வெ.க. பெண் நிர்வாகியிடம் ரகசிய வீடியோக்கள் இருந்ததாகக் கூறப்படும் செல்போனை பறித்துச் சென்ற விவகாரத்தில், நாடகமாடிய அக்கட்சியின் மற்றொரு நிர்வாகியை போலீசார் கைது செய்தனர்.

தூத்துக்குடி மாவட்டம், ஆறுமுகநேரி ராஜமன்னியபுரத்தைச் சேர்ந்த சசிகுமாரின் மனைவி ரோஹிணி (வயது 35), தமிழக வெற்றிக் கழகத்தின் மாவட்ட செயற்குழு உறுப்பினராக உள்ளார். இவர் கடந்த ஜூன் 26ம் தேதி ஆறுமுகநேரி அடைக்கலாபுரம் சாலையில் பைக்கில் நின்றபடி, த.வெ.க. உறுப்பினரான ஆலந்தலை தெற்கு தெருவைச் சேர்ந்த சிபாஸ் (28) என்பவரிடம் பேசிக் கொண்டிருந்தார்.

அப்போது பைக்கில் வைக்கப்பட்டிருந்த ரோஹிணியின் செல்போனை மர்ம நபர் ஒருவர் பறித்துக்கொண்டு தப்பினார். அவரை பிடிப்பது போல சென்ற சிபாஸ், மர்ம நபர் தப்பிவிட்டதாகக் கூறியுள்ளார். இதுகுறித்து ரோஹிணி அளித்த புகாரின் பேரில் ஆறுமுகநேரி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

விசாரணையில், மணப்பாடு பகுதியைச் சேர்ந்த த.வெ.க. உறுப்பினர் ரூஸ்வெல்ட்(44) என்பவருக்கும் ரோஹிணிக்கும் பழக்கம் இருந்துள்ளது. கட்சியில் பொறுப்பு வாங்கித் தருமாறு ரூஸ்வெல்ட் கேட்டு வந்த நிலையில், இருவரின் பழக்கம் தொடர்பான சில ரகசிய வீடியோக்கள் மற்றும் ஆடியோக்கள் ரோஹிணியின் செல்போனில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இது வெளியில் தெரிந்தால் அவமானம் என்று கருதிய ரூஸ்வெல்ட், செல்போனைக் கைப்பற்ற சிபாஸின் உதவிய நாடியுள்ளார். இதற்காக சிபாஸ், தனது நண்பரான உடன்குடி புனிதராஜ் என்பவரை வைத்து நாடகமாடி செல்போனைப் பறித்துச் சென்றது தெரியவந்தது. இதையடுத்து சதித்திட்டத்திற்கு உடந்தையாக இருந்த சிபாஸை போலீசார் கைது செய்தனர்.

செல்போனை பறித்துச் சென்ற புனிதராஜ் ஏற்கனவே வேறு வழக்கில் கைதாகி சிறையில் உள்ளார். தற்போது புனிதராஜிடம் இருந்து செல்போனை பெற்று தலைமறைவாக உள்ள த.வெ.க. உறுப்பினர் ரூஸ்வெல்ட்டை போலீசார் தீவிரமாக வலைவீசி தேடி வருகின்றனர். அவரை பிடித்த பிறகே செல்போனில் இருந்த ரகசிய வீடியோக்கள் குறித்த முழு விவரமும் தெரியவரும் என போலீசார் தெரிவித்தனர்.

# தமிழகம் ரூ.3,200 கோடி வருவாய் இழக்கும் அபாயம்

## முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு எச்சரிக்கை



**சென்னை:**

இது குறித்து முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “மக்களவையில் மத்திய பாஜக அரசு அறிமுகப்படுத்தியுள்ள கனிம வளங்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) திருத்த மசோதா 2026, அரசியலமைப்பு உறுதி செய்யும் நிதிக் கூட்டாட்சி தத்துவத்தின் மீதான நேரடித் தாக்குதலாகும்.

இந்த மசோதாவானது, கடந்த 2024ம் ஆண்டு ஜூலையில் உச்ச நீதிமன்றத்தின் ஒன்பது நீதிபதிகள் அடங்கிய அரசியலமைப்பு அமர்வு, பட்டியல் IIன் 50வது பிரிவின் கீழ், மத்திய அரசு நிர்ணயிக்கும் ராயல்டியில் இருந்து தனித்து, கனிம வளங்கள் மற்றும் கனிமம் நிறைந்த நிலங்கள் மீது வரி விதிக்கும் அதிகாரம் மாநிலங்களுக்கு உண்டு என்று தெளிவாக உறுதி செய்த தீர்ப்பை மறுக்கிறது. வருவாய் ஈட்டும் அதிகாரத்தை மாநிலங்களிடம் இருந்து பறிக்கும் வகையில் இந்த சட்ட மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தால், தமிழ்நாடு சுமார் ரூ.3,200 கோடி வருவாயை இழக்கும் அபாயம் உள்ளது. சீர்திருத்தம் என்ற பெயரில் மாநிலங்களின் நிதி உரிமையைப் பறிப்பதை ஒருபோதும் நாம் ஏற்க முடியாது. தமிழ்நாட்டின் உரிமையையும், வருவாய் ஆதாரத்தையும் பாதிக்கும் இந்த மசோதாவை எதிர்த்து, மாநிலங்களின் நிதி சுயாட்சி மேலும் பறிபோகாமல் நாம் பாதுகாக்க வேண்டும்” என தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

# சென்னையில் சொத்து வரியை 300% வரை உயர்த்தியது ஏற்புடையது அல்ல: மா.சுப்பிரமணியன்



**சென்னை:**

முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் வெளியிட்டுள்ள அறிக்கையில், “கடந்த சில நாட்களாகவே சென்னையில் மக்கள் பரபரப்பாக பேசிக் கொண்டிருக்கிற ஒரு செய்தி சொத்து வரி உயர்வு. சென்னை மாநகராட்சியின் சார்பில் சொத்து வரியினை எப்போதாவது ஒருமுறை உயர்த்துவது என்பது வாடிக்கைதான்.

ஆனால், ஒரு சில இடங்களில் நூற்றுக்கு நூறு சதவீதமும், ஒரு சில இடங்களில் நூற்றுக்கு 300 சதவீதம் அளவுக்கு சொத்து வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்த நிலை எப்படி உருவானது என்ற காரணம் கேட்டால் அரசு தரப்பில். வரி மதிப்பீடுகள் என்பது பரப்பளவை விட குறைவாக மதிப்பிடப்பட்ட குடியிருப்புகள் மாநகராட்சி அலுவலர்களால் கண்டறியப்பட்டு அதன் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டு இந்த வரிகள் கூடுதலாக்கப்பட்டுள்ளது என்றும், குடியிருப்பு வகைப்பாட்டில் சொத்து வரி செலுத்தி விட்டு அதனை வணிகப் பயன்பாட்டுக்கு பயன்படுத்தி வருகிற உரிமையாளர்களுக்கு சொத்து வரி உயர்த்தப்பட்டுள்ளது என்றும் அரசு தரப்பு கூறுகிறது. ஏற்கெனவே மின்சார கட்டணம் பல மடங்கு உயர்ந்த நிலையில் சொத்து வரி உயர்த்தியிருப்பது என்பது ஏற்புடையதாக இல்லை என்று பொதுமக்கள் இதற்கு தங்கள் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள்.

சொத்து வரி உயர்த்த வேண்டும் என்று சொன்னால் அதற்கென்று முறையான வழிமுறைகள் இருக்கிறது. வழக்கமாக மாநகராட்சி மன்ற கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர்களால் விவாதிக்கப்பட்டு இந்த சொத்து வரி உயர்வு என்பது முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இது மன்ற கூட்டத்தில் வைக்கப்படாமல் சர்வாதிகாரமான முறையில் அறிவிக்கப்பட்டு இருப்பது என்பது யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. சொத்து வரி உயர்வு குறித்து பரிசீலித்து முறையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக அரசை கேட்டுக்கொள்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

Prinded by **A.IRUDHAYARAJ**, Prinded at **CHENNAI OFFSET PRINTING** # 19/1,21\2 Kitaath Khan Bahadur Street, Ellis Road, Chennai-600002 Published from 445, Godhamedu, Saidapet, Chennai-600015 Editor: **A.IRUDHAYARAJ** Mobile No.9884183663 Office No: 9499044100 Email:thagavalexpress2021@gmail.com